PIDM

**Perbadanan Insurans Deposit Malaysia**

மலேசியாவில் உங்களின் காப்புறுதியும் வைப்புத்தொகைகளும் பாதுகாக்கப்படுகின்றன




# தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகள் பாதுகாப்பு முறை


# தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகள் பாதுகாப்பு முறை

## PIDM என்பது என்ன?

PIDM என்பது, மலேசிய வைப்புத்தொகை காப்புறுதிக் கழகச் சட்டத்தின் (PIDM சட்டம்) கீழ் 2005-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஓர் அரசாங்க நிறுவனம்.

PIDM இரண்டு முறையில் உங்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறது:

- வைப்புத்தொகை காப்புறுதி முறையின் (DIS) கீழ் வைப்புத்தொகையாளர்
- தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகள் பாதுகாப்பு முறையின் (TIPS) கீழ் தக்காஃபுல் மற்றும் காப்புறுதி பாலிசிகளின் உரிமையாளர்




## உங்களுக்கு PIDM எத்தகைய பாதுகாப்பை வழங்குகிறது?

PIDM ஓர் உறுப்பு காப்புறுதியாளர் (தக்காஃபுல் சேவையாளர் அல்லது காப்புறுதி நிறுவனம்) திவாலாகிவிட்ட பட்சத்தில், **RM500,000** வரை அல்லது அதற்கு மேற்பட்ட உங்களது தகுதிபெற்ற தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகளைப் பாதுகாக்கும்.

### தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகள் பாதுகாப்பு முறை (TIPS) எவ்வாறு செயல்படுகிறது:



உங்கள் தக்காஃபுல் சேவையாளர் அல்லது காப்புறுதி நிறுவனம் PIDM-மின் ஓர் உறுப்பினரா என்பதை தெரிந்து கொள்ள இந்த உறுப்பியத்துவ அடையாளத்தைக் கவனிக்கவும்.



நீங்கள் வாங்கும் ஒரு தக்காஃபுல் அல்லது காப்புறுதி பாலிசி.










உங்கள் தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகளின் கோரிக்கைகளுக்கு PIDM மதிப்பளிக்கும்.

- இந்த பாதுகாப்பு இயல்பாகவே வழங்கப்படுகிறது - விண்ணப்பம் மற்றும் கட்டணம் தேவையில்லை.
- ஓர் உறுப்பு காப்புறுதி நிறுவனம் திவாலாகிவிட்ட பட்சத்தில், தகுதிபெற்ற உங்கள் கோரிக்கைகளுக்கு PIDM மதிப்பளிக்கும்.
- எவ்வாறு, எங்கே மற்றும் எப்போது பணம் வழங்கப்படும் என்பதை PIDM அறிவிக்கும்.








## எத்தகைய பாதுகாப்பு?

உங்கள் தக்காஃபுல் சான்றிதழ் மற்றும் காப்புறுதி பாலிசியானது மலேசியாவில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் மற்றும் ரிங்கிட் மலேசியா (RM) ஆதிக்கத்தில் இருக்கவேண்டும். கீழ்க்காணப்படும் பாதுகாக்கப்பட்டுள்ள சலுகைகள் உதாரணங்களை நீங்கள் சரிபார்க்கலாம்.

**பாதுகாக்கப்பட்டுள்ள தக்காஃபுல் அல்லது காப்புறுதி சலுகைகளின் உதாரணங்கள்***

| பாதுகாக்கப்பட்டுள்ள சலுகைகள் | | | அதிகபட்ச வரம்பு |
|---|---|---|---|
| மரணம் மற்றும் தொடர்புடைய சலுகைகள் |  | இத்தொகை மரணம், ஈமச்சடங்கு மற்றும் தகனச் செலவுகளுக்கு வழங்கப்படும் | RM500,000 |
| நிரந்தர உடல் செயலிழப்பு |  | இத்தொகை நிரந்தர உடல் செயலிழப்புக்கு வழங்கப்படும் | RM500,000 |
| கடுமையான நோய்கள் |  | இத்தொகை கடுமையான நோய்களுக்கு வழங்கப்படும் | RM500,000 |
| மருத்துவச் செலவுகள் |  | இத்தொகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது, சுகாதார செலவுகள் போன்ற மருத்துவ சிகிச்சைகளுக்கு ஏற்படும் செலவுகளுக்கு வழங்கப்படும் | ஏற்படும் செலவுகளின் 100% |
| தவணை முதிர்வு மதிப்பு (முதலீட்டு இணைக்கப்பட்ட திட்டத்தின் மூதலீட்டு பகுதியை தவிர்த்து) |  | இத்தொகை பாலிசி காலத்தின் இறுதியில் வழங்கப்படும் | RM500,000 |
| ஒப்படைத்தல் மதிப்பு |  | பாலிசி காலாவதியாகும் முன்னரே சமர்ப்பிக்கையில் பணம் வழங்கப்படும் | RM500,000 |
| சொத்து சேதம் அல்லது இழப்பு |  | இத்தொகை சொத்து சேதம்/ இழப்புக்கு வழங்கப்படும் | RM500,000 ஒரு சொத்துக்கு |

*தகுதி வாய்ந்த மூன்றம் தரப்பு கோரிக்கைகள், பண ஈவுத்தொகை, ஆண்டுச்சந்தா/ஓய்வூதிய வருமானம், இழப்பீட்டு தொகை மற்றும் ப்ரீபெயட் பங்களிப்புகளின் கட்டணத்தை திரும்ப பெற/தவணைக்கட்டணங்கள் கூட PIDM-மினால் பாதுகாக்கப்படுகின்றன.

கோரிக்கைகள் உங்கள் தக்காஃபுல் அல்லது காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

உங்கள் தனிப்பட்ட மற்றும் குழு சான்றிதழ்கள் அல்லது காப்புறுதி நலன்கள் தனித்தனியாக பாதுகாக்கப்படுகின்றன.



## எது பாதுகாக்கப்படவில்லை?

- வெளிநாட்டு நாணயத்தில் ஆதிக்கம் செய்யும் சான்றிதழ்கள் அல்லது பாலிசிகள்
- மலேசியாவுக்கு வெளியில் வழங்கும் சான்றிதழ்கள் அல்லது பாலிசிகள்
- மூதலீடு தொடர்புடைய சான்றிதழ்களின் முதலீடுகள்


*பாதுகாக்கப்பட்ட நலன்கள் மற்றும் வரம்பின் அளவு குறித்த முழு பட்டியலுக்கு PIDM-முடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

## நான் என்ன செய்யலாம்?

- ✓ உங்கள் தக்காஃபுல் சேவையாளர் அல்லது காப்புறுதி நிறுவனம் PIDM-மின் உறுப்பினரா என்பதை தெரிந்து கொள்ளவும் - இதன் பட்டியல் PIDM-மின் அகப்பக்கத்தில் கிடைக்கும்.
- ✓ PIDM-மின் உறுப்பியத்துவ அடையாளத்தைக் காணுங்கள்

MEMBER / AHLI
成 员 / உறுப்பினர்
PIDM
Perbadanan Insurans Deposit Malaysia
Protecting Your Insurance And Deposits In Malaysia

- ✓ உங்கள் தக்காஃபுல் மற்றும் காப்புறுதி சலுகைகள் PIDM-மினால் பாதுகாக்கப்படுகின்றனவா என சரிபார்க்கவும்.





PIDM
Perbadanan Insurans Deposit Malaysia
மலேசியாவில் உங்களின் காப்புறுதியும் வைப்புத்தொகைகளும் பாதுகாக்கப்படுகின்றன

**தொடர்பு மற்றும் பொதுவிவகாரப் பிரிவு**
Level 9, Bangunan AICB, 10, Jalan Dato' Onn,
50480 Kuala Lumpur.
தொலைபேசி: 603-2173 7436 / 2265 6565 தொலைநகல்: 603-2173 7527 / 2260 7432